2023 ஏப்ரல் 5]

விவசாயிகள் ஏற்கெனவே இலட்சக்கணக்கானோர் பதிவு செய்து காத்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு முழுவதுமாக மின் இணைப்பு வழங்கப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தைத் துறை பரிசீலிக்கும். ஏனென்றால், ஏற்கெனவே நான்கரை இலட்சம் பேர் பதிவு செய்து, ஒன்றரை இலட்சம் பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய விவசாயிகள், அதிகமான நிலப்பரப்பு கொண்ட, குறிப்பாக இரண்டு ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் இன்னும் காத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

107—

பேருந்து வசதி

***18247—திரு. S.S. பாலாஜி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, கேளம்பாக்கம்–கோவளம்–மாமல்லபுரம்–திருப்போரூர் வழியாகச் சுற்றுவட்ட பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள், சுற்றுவட்ட வழித்தடத்தில் பேருந்து கோரியுள்ளார். ஏற்கெனவே, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில்

TRUTH ALONE TRIUMPHS

இதுபோன்ற பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இயக்கப்பட்ட பேருந்துகளுக்குப் போதிய வரவேற்பு இல்லாமையின் காரணத்தினாலும், போதிய வருவாய் இல்லாத காரணத்தினாலும், அதுபோன்ற வழித்தடங்கள் நிறுத்தப்பட்டுவிட்டன. எனவே, இப்போது அதுபோன்ற சுற்றுவட்ட வழித்தடப் பேருந்துகளை இயக்குவதற்கு போக்குவரத்துக் கழகத்தில் குறிப்பேதுமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளம்பாக்கம் என்பது சென்னை மாநகராட்சியிலிருந்து ECR பகுதிகளுக்குச் செல்லக்கூடிய ஒரு மைய பகுதி. GST Road–ம் வந்து இணையக்கூடிய பகுதி. OMR, ECR, GST அனைத்தும் இணையக்கூடிய பகுதி. அதோடு மட்டுமல்லாமல், அதன் அருகிலே பல கல்லூரிகள் இருக்கின்றன. செட்டிநாடு மருத்துவக் கல்லூரி இருக்கிறது; இந்துஸ்தான் கல்லூரி இருக்கிறது; SSN கல்லூரி இருக்கிறது; VIT கல்லூரி இருக்கிறது. இப்படி பல கல்லூரிகள் இருக்கின்றன. சுற்றுலாத் தலங்கள் என்று பார்த்தால், கேளம்பாக்கத்தின் பக்கத்தில் கோவளத்தில் Blue Beach இருக்கிறது. அருகிலே முட்டுக்காடு இருக்கிறது. அங்கே முதலை பண்ணை இருக்கிறது; திருவிடந்தை நித்ய கல்யாண பெருமாள் கோயில் இருக்கிறது; ஸ்ரீஸ்தலசயன பெருமாள் கோயில் இருக்கிறது; மாமல்லபுரம் இருக்கிறது; புலிக்குகை இருக்கிறது; ஆலத்தூர் தொழிற்பேட்டை இருக்கிறது. இந்தத் தடத்திலே பேருந்து இயக்கினால் உறுதியாக அரசுக்கு இலாபகரமாக இருக்கும் என்கின்ற அடிப்படையில் அதனை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், சென்னையிலேகூட. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்னொரு கேள்வி கேட்பதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே உள்ள சிறுசேரி SIPCOT–ஐ விட்டுவிட்டார். அதனையும்*

2023 ஏப்ரல் 5]

இணைத்துக்கொள்ளலாம். எனது மகன் கேளம்பாக்கத்திலுள்ள கல்லூரியில் படிக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதி முழுமையும் நான் அறிந்த பகுதி. அதேபோன்று, நாங்கள் ஊருக்குச் செல்கின்றபோது இந்தப் பக்கத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தால், திருப்போரூர் வழியாக செங்கல்பட்டு சென்று அங்கிருந்து செல்லும் வழக்கம் இருப்பதால், அந்தப் பகுதி முழுமையும் நான் அறிந்த பகுதிதான். இருந்தாலும், அந்த வழித்தடம் என்பது, முழுவதும் நன்கு இணைக்கப்பட்ட பகுதி. மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் தடம் எண் 515A பேருந்து மேற்கு தாம்பரம்–கோவளம் இடையே 11 பேருந்துகள் இயங்குகின்றன. பிராட்வே–திருப்போரூர் இடையே உள்ள வழித்தடத்தில் தடம் எண் 109X, 1 பேருந்து இயங்குகிறது. பட்டூர்–கோவளம் இடையே உள்ள வழித்தடத்தில் தடம் எண் 566B, 2 பேருந்துகள் இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் 14 பேருந்துகள் கேளம்பாக்கம்–கோவளம் வழியாக இயக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட பேருந்துகளைப் பயன்படுத்தி கோவளம் வந்தடைந்தால், அவ்வழியாக இயக்கப்படும் தடம் எண் 588 பேருந்து வழித்தடத்தில் திருவான்மியூர்–மாமல்லபுரம் இடையே 5 பேருந்துகள், தடம் எண் 588B என்ற வழித்தடத்தில் மாமல்லபுரம்–பெசன்ட் நகர் இடையே 5 பேருந்துகள், தடம் எண் 102X என்ற வழித்தடத்தில் பிராட்வே–திருப்போரூர் இடையே 15 பேருந்துகள் என மொத்தம் 25 பேருந்துகளைப் பயன்படுத்தி மாமல்லபுரம் வந்தடையலாம். தடம் எண் 515 என்ற வழித்தடத்தில் தாம்பரம்–மாமல்லபுரம் இடையே திருப்போரூர் வழியாக இயக்கப்படுகின்ற 14 பேருந்துகள்மூலம் திருப்போரூர் சென்றடையலாம். எனவே, கேளம்பாக்கம், கோவளம், மாமல்லபுரம், திருப்போரூர் இவற்றிற்கு மேற்கண்ட வழித்தடங்களைப் பயன்படுத்தி பொதுமக்கள் பெருமளவில் பயணம் செய்து வருகிறார்கள். எனவே, சுற்றுவட்ட வழித்தடம் என்பதைத் தாண்டி, இந்தப் பேருந்துகளே அவற்றை இணைப்பதால், தேவையான அளவிற்கு இப்போது போக்குவரத்து வசதி அந்தப் பகுதிகளில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

[*2023 ஏப்ரல் 5*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரப் போக்குவரத்து வழித்தடம் 519T தற்போது தையூர்–கோமான் நகர் வரை இயக்கப்படுகிறது. காயார் என்ற பகுதி மிகவும் பின்தங்கியிருக்கக்கூடிய பகுதி, பழங்குடியின மக்கள், மாணவர்கள் வசிக்கக்கூடிய பகுதி. எனவே, அதை காயார் பகுதி வரை இன்னும் சற்று நீட்டித்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையும், தற்போது மானாமதி வரை இயக்கப்படுகின்ற சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தினுடைய சேவையை திருக்கழுக்குன்றம் வரை நீட்டித்துத் தருவதற்கும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த* mini bus *திட்டத்தை மீண்டும் அரசு செயல்படுத்துவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட வழித்தடங்களை மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் எழுதி தருமாறு அன்போடு கோருகிறேன். கேட்பவர் எஸ்.எஸ். பாலாஜி; பதில் சொல்பவன் எஸ்.எஸ். சிவசங்கர். எனவே, பதிலை* yes, yes *என்று சொல்வதற்கே விரும்புகிறேன்.*

அதேபோல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் Mini Bus *திட்டத்தை மிகச் சிறப்பாகக் கொண்டு வந்த காரணத்தினால்தான், அரசு பேருந்துகள் செல்ல முடியாத குக்கிராமங்களுக்கு அந்தப் பேருந்து வசதி செய்து தரப்பட்டு, பெருமளவில் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. அந்தப் பேருந்து உரிமையாளர்கள் இடைப்பட்ட காலத்தில் மினி பேருந்துகளைச் சரியாக இயக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டிருக்கின்ற சூழலை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்களுடைய கருத்துகள் கேட்கப்பட்டு, அரசு அதிகாரிகள் மட்டத்தில் ஆய்வு நடத்தப்பட்டு, ஓர் அறிக்கை தயார் செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கொடுக்கப்பட்டு, நல்ல தீர்வு காணப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2023 ஏப்ரல் 5]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில், 1972 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பெரம்பூரில் ஒரு பேருந்து முனையம் உருவாக்கப்பட்டது. பெரம்பூர் பேருந்து முனையத்திலிருந்து 7 என்ற எண் கொண்ட பேருந்து* Broadway *வரையிலும், 29–*N *என்ற எண் கொண்ட பேருந்து வேளச்சேரி வரையிலும், 46*F *என்ற எண் கொண்ட பேருந்து கோயம்பேடு வரையிலும் சென்று கொண்டிருந்தன. இந்தப் பேருந்துகள் கடந்த காலங்களில் நிறுத்தப்பட்டுவிட்டன. எனவே, நிறுத்தப்பட்ட அந்தப் பேருந்து வழித்தடங்களை மீண்டும் இயக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல, 164 மற்றும் 164J எண் கொண்ட பேருந்துகள் மீஞ்சூர் வரை சென்று கொண்டிருக்கின்றன. அதனை பொன்னேரி வரையில் நீட்டித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சோழிங்கநல்லூரில் IT *நிறுவனங்கள் நிறைந்து காணப்படுகின்றன. அங்கு பணிபுரியும் இளைஞர்களின் எண்ணிக்கை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இத்தனை* number*–யும் ஓர் அமைச்சர் ஞாபகம் வைத்து சொல்ல முடியுமா? சொல்லுங்கள். துணைக் கேள்வி கேட்கும்போது இதைச் செய்யுங்கள் என்று சொல்லுங்கள். கேள்வி கேட்கின்றபோது இவற்றையெல்லாம் சேர்த்து எழுதிக்கொடுங்கள். உரையை முடியுங்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *சோழிங்கநல்லூரில்* IT *நிறுவனங்களில் பணிபுரிகின்ற இளைஞர்களின் எண்ணிக்கை என்னுடைய தொகுதியில் நிறைந்து காணப்படுகின்ற காரணத்தினால், சோழிங்கநல்லூருக்கு நேரடி வழித்தடம் ஒன்றை உருவாக்கித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2023 ஏப்ரல் 5*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. தாயகம் கவி அவர்கள் எழுத்துமூலம் அளித்தால், அதை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, பெரம்பூரிலிருந்து சோழிங்கநல்லூர் வரை பேருந்து இயக்கப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார். நகரப் பேருந்துகள் இயக்குகின்ற அந்தக் குறிப்பிட்ட கிலோ மீட்டர் இடைவெளியைத் தாண்டி அது இருக்குமென்று கருதுகிறேன். இருப்பினும், அதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர் அவர்கள்.*

திரு. S. சேகர்: *எங்களுடைய பொதுச் செயலாளர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் S. சேகர். பரமத்தி–வேலூர் தொகுதியிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட கிட்டத்தட்ட நான்கு பேருந்துகள் இப்போதும் இயக்கப்படவில்லை. அப்பகுதிகளுக்கு மீண்டும் பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சேகர் அவர்கள், அந்த வழித்தடங்களை எழுத்து வடிவில் கொடுத்தால், அதிகாரிகளிடம் கொடுத்து, ஆய்வு மேற்கொள்ளப்பட்டு,* yes, yes *என்று பதில் சொல்வதற்கு முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*